# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.48/2024** **நாள் : 27.06.2024**

நெம்மேலியில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 110 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் பிரதான குழாயில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் 30.06.2024 அன்று காலை 9 மணி முதல் 01.07.2024 அன்று காலை 9மணி வரை (**1 நாள் மட்டும்**) மண்டலம்–13, 14 மற்றும் 15–க்குட்பட்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம்.

## சென்னைக் குடிநீர் வாரியம் தகவல்

நெம்மேலியில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 110 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் பிரதான குழாயில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் அடையாறு, பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களுக்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் 30.06.2024 அன்று காலை 9 மணி முதல் 01.07.2024 அன்று காலை 9 மணி வரை (**1 நாள் மட்டும்**) குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| மண்டலம்–13<br>(அடையாறு (பகுதி) | திருவான்மியூர், பள்ளிப்பட்டு<br>கோட்டூர் கார்டன். ஆர்.கே.மடம் தெரு,<br>இந்திரா நகர் OHT |
| மண்டலம்–14<br>(பெருங்குடி) | கொட்டிவாக்கம், பாலவாக்கம், பெருங்குடி,<br>பள்ளிக்கரணை, மடிப்பாக்கம் |
| மண்டலம் - 15<br>(சோழிங்கநல்லூர்) | ஈஞ்சம்பாக்கம், நீலாங்கரை, அக்கரை,<br>எழில் நகர், கண்ணகி நகர், காரப்பாக்கம்,<br>வெட்டுவான்கேணி, சோழிங்கநல்லூர்,<br>ஒக்கியம் - துரைப்பாக்கம் |

........2.

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, போதுமான அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in/ என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும். மேலும், கூடுதல் தகவல்களுக்கு 044-4567 4567 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater cmwssb.tn.gov.in